

# நீங்கள் ஆவிக்குரிய வகையில் உயிரோடிருக்கிறீர்களா? அல்லது மரித்துக்கொண்டிருக்கிறீர்களா?

**P.C. பிலேமோன் ராஜா**
ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை

அன்பான சகோதர சகோதரிகளே உங்கள் யாவரையும் நம்மை ஆவிக்குரியவர்களாக மாற்ற தம்முடைய ஜீவனை தந்த ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே வாழ்த்துவதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

பிரியமானவர்களே! சில காரியங்கள் அடிக்கடி நாம் ஒருவருக்கொருவர் ஞாபகபடுத்த, புத்திசொல்ல கடமைபட்டிருக்கிறோம். அப்படி ஒரு காரியத்தை பற்றி இந்த நாளில் நான் உங்களோடு பகிர்நதுக்கொள்ள தயவு பாராட்டின ஆவியாயிருக்கிற எல்லாம் வல்ல பரம பிதாவிற்கு நன்றி செலுத்துகிறேன்.

பிரியமானவர்களே! நாம் இந்த பூமியில் வாழ்ந்தாலும் நாம் இந்த பூமிக்கு உரியவர்கள் அல்ல, மாறாக ஆவிக்குரியவர்கள் என்று வேதாகமம் நம்மை அடிக்கடி ஞாபகப்படுத்துகிறது.

பவுல் இவ்வாறாக சொல்கிறார், மாம்சமும் ஆவியும் ஒன்றுக்கொன்று விரோதமாய் போராடிக் கொண்டேயிருக்கிறது என்று. காரணம் என்னவெனில், தேவன் ஆவியை நமக்கு மாமிசத்திற்குள் வைத்திருக்கிறார். ஆனாலும், பல வேளைகளில் மாமிசம் இந்த ஆவியை மேற்கொள்கிறது. இந்த ஆவிக்காகத்தான் மாம்சம் இருக்கிறது என்பதை நாம் மறந்து போய்விடுகிறோம் அல்லது மறக்க வைத்துவிடுகிறது.

தேவன் ஆவியாயிருக்கிறார், நாம் அவருடைய சாயலில் படைக்கப்பட்டோம். தேவன் நமக்கு கொடுத்த ஆத்துமாவோடே நாம் வாழ்ந்துக்கொண்டிருக்கிறோம். தேவ சாயலில் இருக்கிற ஆவிக்குரியவர்களாகிய நாம், ஆவிக்குரியவைகளிலிருந்து விழுந்து மரித்துப்போய்விட்டோம். மறுபடியும் நாம் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறந்ததினாலே, மீண்டும் ஆவிக்குரியவர்களாக மறுபடியும் அந்த ஆசிர்வாதத்தை பெற்றிருக்கிறோம்.

இவ்வாறாக, நாம் ஆவிக்குரியவர்களாக ஆவிக்குரிய காரியங்களை செய்ய முயற்சிக்கும் போது, ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடு சிந்திக்காமல், மாம்சத்திற்குரியவைகளோடு

சிந்திக்கும்போது, மாம்சமும் ஆவியும் ஒன்றுக்கொன்று போராடுகிறது. தேவனுக்கு முதலிடமா? மனைவி, பிள்ளைகள், உலக வேலை இவைகளுக்கு முதலிடமா? என்று வரும்பொழுது, தேவன் தான் எல்லாம் என்று சொல்லிவிட்டு, தேவன் தானே இவை எல்லாம் கொடுத்தார் என்று நமக்கு நாமே நம்மை சமாதானப்படுத்திக்கொண்டு, தேவனுடைய காரியங்களை ஒதுக்கிவிட்டு, உலகத்தின் காரியங்களை செய்கிறோம்.

நாம் ஆவிக்குரியவர்களா? பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்படுகிறோமா? கிறிஸ்துவின் ஆவி நமக்குள் இருக்கிறதா? அப்படியிருக்கிறது என்றால், சிலுவைபற்றிய செய்தியை கேட்டதும், இதுவரையில் நான் வாழ்ந்த வாழ்க்கையை விட்டுவிட்டு, என் மீது அன்பு கொண்டு எனக்காக மரித்த இயேசுவிற்காக நான் வாழப்போகிறேன் என்ற எண்ணம் வருகிறதா?. சில காரியங்களை இயேசுவிற்கு பிடிக்காது. ஆகையால் என்னை மாற்றிக்கொள்ள போகிறேன் என்ற எண்ணம் வருகிறதா? அல்லது இன்னும் அப்படியே இருக்கிறதா? சிந்தித்துப் பார்ப்போம்.

1கொரி 1:18, ‘சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது.’ சிலுவை செய்தி நம்மை பெலப்படுத்த வேண்டும். நம்மை மாற்ற வேண்டும். சிலுவை செய்தியினாலே மாறாத ஒரு நபரின் வாழ்க்கை பரிதாபத்திற்குரியது. அப்படி மாற்றப்பட்ட அவர்களால் நிச்சயமாகவே, ஆராதனையையோ திருவிருந்தையோ தவறவிட முடியாது. எனக்கு இந்த வாரம் முக்கியமான வேலை இருக்கிறது. அடுத்த வாரம் வருகிறேன் என்று சொல்லவும் முடியாது. சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்கு தான் பைத்தியமாக தோன்றும். சிலர் தாங்கள் ஆயத்தமில்லை எனக்கூறி திருவிருந்தை தவறவிடுகின்றனர். அப்படி நாம் தவறவிட்டால் ஆவிக்குள்ளே நாம் செத்துக்கொண்டேயிருக்கிறோம்.

வெளி 2:4, ‘ஆனாலும், நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன்பேரில் எனக்குக் குறை உண்டு.’ பாவமன்னிப்பிற்கென்று திருமுழுக்குப் பெற்று, கிறிஸ்துவால் அவருடைய சபையிலே அங்கமாக சேர்க்கப்பட்டு, பரிசுத்த ஆவியானவரையே வரமாக பெற்ற, அன்று நாம் ஆனந்தமாக இருந்தோம் அல்லவா.? பைபிள் படிப்பது, ஜெபிப்பது, கொடுப்பது, ஊழியங்களில் பங்கு பெறுவது என்று

இருந்தோம் அல்லவா. பின்பு, நாளடைவில் குடும்பம், வேலை என்று நமக்குள் உலகம் நிறைந்துவிட்டது. ஆதியில் இருந்த அன்பை நாம் விட்டுவிட்டோம். அப்படி விட்டுவிட்ட நாம் ஆவியில் செத்துக்கொண்டிருக்கிறோம் என்ற மாபெரும் சிந்தை நமக்கு முன் வைக்கப்பட்டிருக்கிறது.

சங் 122:1, 'கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவோம் வாருங்கள் என்று எனக்கு அவர்கள் சொன்னபோது மகிழ்ச்சியாயிருந்தேன்.' சபையாக கூடி ஒரு கூட்டம் வைப்பதை பற்றி பேசும் போது, அடுத்த மாதம் அதே தேதிகளில் ஒரு முக்கியமான காரியம் இருக்கிறது என்று நாம் சிந்திக்கிறோம் என்றால், ஆவிக்குரிய காரியங்களில் நமக்கு நாட்டம் குறைகிறது. ஆவிக்குரிய காரியத்தில் பங்கு பெறச் சொன்னால் சந்தோஷம் வருகிறதா? அல்லது காரணம் சொல்லிக் கொண்டிருக்கிறோமோ.? ஊழியத்தில் பங்குபெறுங்கள் என்றால், பணம் தந்து ஒதுங்கிக்கொள்கிறோமா, தெரு தெருவாக அலைந்து ஊழியம் செய்த இயேசுவின் அடிச்சுவடுகளை தொடர்ந்து பின்பற்றி வரும்படி நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். ஆவிக்குரிய காரியங்களில் நாட்டமில்லாதவரும், கர்த்தருடைய வேலையை செய்யாதவரும் ஆவிக்குரிய ரீதியில் செத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ரோமர் 1:14-15, 'கிரேக்கருக்கும், மற்ற அந்நியர்களுக்கும், ஞானிகளுக்கும், மூடருக்கும் நான் கடனாளியாயிருக்கிறேன். ஆகையால் ரோமாபுரியிலிருக்கிற உங்களுக்கும் என்னால் இயன்றமட்டும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க விரும்புகிறேன்'. ஊழியத்திற்கு வரும்படி தேவன் கட்டாயப்படுத்தவில்லை. அப்படி வந்தால் தேவன் சந்தோஷப்படுவார். ஆகையால், வாருங்கள் என்று தேவன் சார்பாக உங்களை அழைக்கிறேன். ஏனெனில், அறுப்பு மிகுதி. வேலையாட்களோ கொஞ்சம். விருப்பம் இருந்தால் வாருங்கள். அதிகம் செய்ய முடியாவிட்டாலும், பவுல் சொல்வதை போன்று இயன்ற அளவாயினும் செய்யுங்கள். தினமும் 10 நிமிடமாவது ஆண்டவரைப் பற்றி சொல்ல ஒதுக்குங்கள். நாளடைவில் 30 நிமிடமாகவோ, ஒரு மணி நேரமாக மாற்றி, வாழ்நாள் முழுவதும் ஆண்டவருக்கு தினந்தோறும் ஊழியம் செய்யுங்கள்.

2தீமோ 4:10, 'ஏனென்றால், தேமா இப்பிரபஞ்சத்தின்மேல் ஆசைவைத்து,

> தேவனுக்காக நாம் செய்தவைகளை சாத்தான் ஞாபகப்படுத்துவான், நாம் திருப்தியடைந்து நின்றுவிட.

என்னைவிட்டுப் பிரிந்து, தெசலோனிக்கே பட்டணத்துக்குப் போய்விட்டான். கிரெஸ்கே கலாத்தியா நாட்டிற்கும், தீத்து தல்மாத்தியா நாட்டிற்கும் போய்விட்டார்கள். சமீபத்தில் ஒரு நல்ல தம்பதியினிடத்தில் நான் பேசிக்கொண்டிருந்தேன். அவர்கள் இருவரும் வெளிநாட்டில் வேலை செய்கிறார்கள். குறைந்த நாட்கள் அவர்கள் இங்கு வந்து இருந்தனர். ஆனால், அதற்குள் அவர்கள் வீட்டில் 3 கூட்டங்கள் ஒழுங்கு செய்து நடத்தினார்கள். ஒரு வேத வகுப்பில் செய்தி கொடுக்க நான் சென்றிருந்தேன். ஆவிக்குரிய காரியத்தில் இவ்வளவு ஆர்வமாக இருக்கறீர்கள், மிக்க மகிழ்ச்சி. நீங்கள் வேலை பார்க்கும் இடத்தில் வாரந்தோறும் ஆராதனைக்கு செல்கிறீர்களா என்று கேட்டேன். அவர்கள் சொன்னது என்ன தெரியுமா? 'நாங்கள் ஆராதனைக்கு செல்வதில்லை' என்றார்கள். உலகத்தின் மீது ஆசை வைத்து தேவனை விட்டு போகிற நிலைமை மிகவும் அபாயகரமானது. ஆராதனையை தவறவிடுவது ஆபத்தானது. இது சாபமில்லை, சத்தியம்! அப்படி தவறவிட்டால் நீங்கள் ஆவிக்குள்ளாக செத்துக் கொண்டிருக்கிறீர்கள்.

மத் 25:24-30ல், ஒரு தாலந்தை வாங்கினவன் கொண்ட தப்பெண்ணத்தை நம்மால் பார்க்க முடிகிறது. ஒரு தாலந்தை வாங்கினவன் வந்து: ஆண்டவனே, நீர் விதைக்காத இடத்தில் அறுக்கிறவரும், தெளிக்காத இடத்தில் சேர்க்கிறவருமான கடினமுள்ள மனுஷன் என்று அறிவேன். ஆகையால், நான் பயந்து, போய், உமது தாலந்தை நிலத்தில் புதைத்து வைத்தேன், இதோ, உம்முடையதை வாங்கிக்கொள்ளும் என்றான். தேவன் கொடுத்ததே விருத்தியாகத்தான். தேவன் மீது தப்பெண்ணம் கொண்டிருந்தால், ஆவிக்குள்ளாக செத்துக்கொண்டிருக்கிறோம்.

பிரியமானவர்களே! ஆவிக்குரியவர்களாகிய நாம் ஆவிக்குள்ளாக உயிரோடிருக்கிறோமா? அல்லது செத்துக்கொண்டிருக்கிறோமா? இன்றே நம்மை சரி செய்து, பரிசுத்த ஆவியின் துணைக்கொண்டு கிறிஸ்துவின் உபதேசத்தின் படி வாழ்வோம். தேவன் தாமே உதவி செய்வாராக!.

– அன்புடன் **ஆசிரியர்**

தேவனுக்காக நாம் செய்யவேண்டியவைகளை ஆவியானர் ஞாபகப்படுத்துவார், நாம் தொடர்ந்து செயல்பட...



# நித்திய பலி

Eternal Sacrifice

# உடன்படிக்கையின் இரத்தம்



BETTY CHOATE

**– தொடர்ச்சி...**

மிகத் துல்லியமான கற்பனைகளைக் கொடுத்தார். அவை தவறாது பின்பற்றப்பட்டன. லேவியராகமத்தில் கூறப்பட்ட காட்சியின் அப்பம் (லேவியராகமம் 24:5-8) வாரந்தோறும் திட்டமான அளவுகளோடு செய்யப்பட்டது. எகிப்து தேசத்தில் யூதமக்கள் இந்த விருந்துக்காக சிந்தனையின்றி அருகில் வசித்த எகிப்தியரிடம் அப்பத்தை வாங்கியிருப்பார்கள் என்று நினைக்க முடியுமா?

பவுல் சொன்னவைகள் தற்காலத்திற்கு மிகவும் பொருத்தமாக இருக்கிறது. கொரிந்தியருக்கு எழுதின முதலாம் நிருபத்தில்: “இதினிமித்தம் உங்களில் அநேகர் பலவீனரும் வியாதியுள்ளவர்களுமாயிருக்கிறீர்கள் அநேகர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள். '' என்று கூறியிருக்கின்றார்கள்.

இந்த அனுசரிப்பைக் குறித்து எந்தச் சட்ட நியதியுமில்லை. இது நமது மனப் பக்குவத்தைப் பொறுத்திருக்கிறது. இந்தக் காரியங்களில் கருத்துள்ளவர்களாயிருந்தால் வேத வசனங்களில் கூறப்பட்டவைகளைப் பின்பற்றுபவர்களாக இருப்போம்.

மரியாளும், மார்த்தாளும் அப்பத்தையும் திராட்சை ரசத்தையும் சாதாரணமாக நினைத்து கடைகளில் வாங்கியிருப்பார்கள் என்று எண்ணிப் பார்க்க முடிகிறதா, ‘அப்பம் செய்ய எங்களுக்குத் தெரியாது, அது கடினமான காரியம்’ என்று ஒதுங்கியிருந்திருப்பார்களோ; நாமாயிருந்தால் அப்படிக் கூடச் செய்திருப்போம்.

ஆனால் அந்தப் பெண்கள் (மரியாள், மார்த்தாள்) ஒருவரோடுடொருவர் போட்டியிட்டுக் கொண்டு, அந்தக் காரியத்தைத் தங்கள் சொந்தக் கைகளினாலே செய்து ஆராதானைக்கு வழங்கினார்கள். மாவை எடுத்து, எண்ணெய் சேர்த்து, பிசைந்து, அப்பத்தைச் செய்யும் போது, முணுமுணுப்புடனோ, வெறுப்புடனோ அவர்களது மனம் இருந்திருக்காது. அதேநேரம், அதைச் செய்வதும் ஆராதனைக்கு ஒப்பான காரியம் என்றே எண்ணியிருப்பார்கள். அப்பொழுது ஆண்டவரின் திவ்ய பிரசன்னத்தையும் கண்டிருப்பார்கள்.

அப்பமும் ரசமும் முக்கியத்துவமுடையதாயிருக்க, அப்பம் கையினால் கருத்துடன் செய்யப்பட வேண்டும் என்றும், ரசம் மாத்திரம் வெளியில் வாங்கப்படலாம் என்று கூறுவது எப்படியென்று கேட்கலாம்.

இரண்டையும் நாமே செய்வது மிக மிக நல்லது. ஆனால் சீதோஷ்ணம், அல்லது போதிய நிலம் ஒவ்வொரு கிறிஸ்துவனுக்கும் இல்லாமலிருக்கலாம். அதனால் ரசம் தயாரிப்பது முடியாத ஒன்று. எனவே ரசம் வெளியிலிருந்து வாங்கப்படலாம். அது மட்டுமல்ல, இவ்விரண்டையும் நாமே செய்தாக வேண்டுமென்று கட்டளை எதுவும் கொடுக்கப்படவில்லை.

இ) பந்தியில் பங்குபெறும்போது சபையாக அதிக நேரம் மனதை ஆயத்தம் செய்து பின்னர்தான் பங்கு பெற வேண்டும். நம்மைச் சோதித்துப் பார்க்க வேண்டும். “எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணக் கடவன்.’’ (1 கொரிந்தியர் 11:28)

தவறுகளை அறிக்கையிட வாய்ப்புத் தர வேண்டும். யாருக்குத் தவறிழைத்திருந்தாலும் அவரிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும். இவ்விதமாக அனுசரிக்கப்பட வேண்டும்.

ஈ) பிறகு இது தொடர்பான வேதவசனங்களை, சிந்தனை விளக்கங்களை இது எந்தப் பின்னணியில் உருவானது போன்றவற்றை ஆராய்ந்து இந்த நினைவு கூறுதலைப் பற்றி அறிய வேண்டும். நோக்கத்தை மறந்து விட்டு சடங்குகளில் மூழ்கிவிடலாகாது. சபையில் கூடுவதும் ஆராதிப்பதும், அனுசரிப்பதும் ஏதோ ஒரு கடன் என்று எண்ணிவிடலாகாது.

நாம் சில சமயங்களில் கர்த்தருடைய நாளில் சபையோடோ, கிறிஸ்தவர்களோடோ இல்லாமல் தனித்திருக்க நேரிடலாம்.

அவ்வாறு ஒரு சமயம், கர்த்தருடைய பந்தியில் இணைய வேண்டிய நாளில் நாங்கள் ஒரு பாழடைந்த பழங்கால ரோம கட்டிட அரங்கின் நிழலில் உட்கார்ந்திருந்தோம். கர்த்தருடைய பந்திக்காக ஆயத்தம் பண்ணிக்கொண்டிருந்தபோது, ரோம ராஜ்யத்தின் பழங்காலச் சிந்தனைகள் வந்து எங்களை பிரமிக்கச் செய்து கொண்டிருந்தது.

அன்று அந்த நாட்டின் முதன்மையான நோக்கம் என்னவாக இருந்தது என்றால், எவ்வாறாகிலும் கிறிஸ்தவ மதத்தை இல்லாமல் ஆக்கிவிட வேண்டும் என்பதுதான் அதன் நோக்கமாக இருந்தது.

அதற்கு நேர்மாறாக, கிறிஸ்தவர்களுக்கென்று ஒரு படையோ ஆயுதங்களோ, வழிநடத்த ஓர் அமைப்போ இருக்கவில்லை. அது மட்டுமல்ல, கிறிஸ்தவர்கள் தொழுது கொள்ளும் தேவனுடைய மகிமையைக் கூறி அறிவிக்க கல்வெட்டுகளோ, நினைவுச் சின்னங்களோ கிடையாது. ஆனால், அவர்களிடமிருந்த எளிதான நினைவுச் சின்னம் ஒன்றுதான், அதுதான் இந்த அப்பமும், திராச்சை ரசமும்.

நூற்றாண்டுகள் நகர்ந்து விட்டன. ரோம ராஜ்யம் தகர்ந்துவிட்டது. ஆனால், இந்த அப்பமும் ரசமும் வரலாற்றிலும்,

நாம் தினந்தோறும் ஆண்டவருக்காக எதையாவது செய்வோம்,
ஆண்டவர் நமக்காக எல்லாம் செய்வார்.

கிறிஸ்தவ வாழ்விலும் நிலைத்து நின்றிருக்கிறது. இதை எவரும் எ ண் ணி க் கூ ட ப் பார்த்திருக்கமாட்டார்கள். ஆனாலும், பலபல நூற்றாண்டுகள் உருண்டோடி விட்டன.

வரலாற்றில் எந்த ஒரு நினைவுச் சின்னமும் நிலைத்திருக்கவில்லை. காலப்போக்கில் கலைந்து போனதையே பார்க்கிறோம்.

ஆனால், வரலாறு கடந்த ஒரு நினைவுச் சின்னம் இன்னும் நம்மத்தியில் அனுசரிக்கப்படுகிறது.

இவைகளெல்லாம் எங்கள் மனதில் அலைபாய்ந்து கொண்டிருந்தது. அந்த ரோம சின்னத்தின் இடிபாடுகளுக்கிடையிலே நாங்கள் எங்கள் கரங்களில் எந்தவொரு இடிபாடுகளுக்கும் ஆட்படாத நினைவுச் சின்னங்களான அப்பமும் ரசமும் இருந்தது.

**அப்பம்**

ஒரு கோப்பை சாதாரண மாவு

மூன்று தேக்கரண்டி ஒலிவ எண்ணெய்

கொஞ்சம் உப்பு

எண்ணெயை மாவில் ஊற்றி இரண்டு தேக்கரண்டி தண்ணீர் சேர்த்து, ஒன்று கூட்டிப் பிசைந்து தட்டையான ஒரு பரப்பின் மீது வைத்து சிறு சிறு துண்டுகளாக்கி, அடுப்பில் வைத்து 450டிகிரி சூடாக்கி பழுப்பு நிறமாகும் வரை வைத்து இறக்க வேண்டும்.

**அரசாட்சி செய்யும் தேவன்**

தேவன் ஆவிக்குரிய உலகில் ஆளுகை செய்கிறார் என்பதையறிவோம். பாவம் நிறைந்த இந்த உலகை ஆளுகை செய்கிறாரா என்று அனேகர் உள்ளத்தில் கேள்வி எழுகிறத. தேவ வசனங்களை நாம் ஆராய்ந்து பார்க்கும்போது இங்கு தேவ ஆளுகையை உறுதி செய்வதோடு மட்டுமல்ல. இயேசு இந்த பூலோகத்திற்கும் பரலோகத்திற்கும் ஆண்டவர் என்று உயர்த்திக் காட்டுகிறது.

'' வானத்திகூம் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது'' ( மத்தேயு 28:18)

" நான் பார்த்துக் கொண்டிருக்கையில், இதோ மனுஷ குமாரனுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்களுடனே வந்தார். அவர் நீண்ட ஆயுசுள்ளவர் இடம் மட்டும் வந்து, அவர் சமீபத்தில் கொண்டுவரப்பட்டார். சகல ஜனங்களும், ஜாதியரும் பாஷைக்காரரும் அவரையே சேவிக்கும்படி கர்த்தத்துவமும் மகிமையும் ராஜரீகமும் கொடுக்கப்பட்டது. அவருடைய கர்த்தத்துவம் நீங்காத நித்திய கர்த்தத்துவமும் அவருடைய ராஜ்யம் அழியாததுமாயிருக்கும்" ( தானியேல் 7:13,14) என்றும்

'' ஆட்டுக்குட்டியானவர் கர்த்தாதி கர்த்தரும், ராஜாதிராஜாவுமாயிருக்கிறார்'' (வெளிப்படுத்தின விசேஷம் 17:14 ) என்றும் வாசிக்கிறோம்.

இயேசுக் கிறிஸ்து மனிதரூபத்திலிருந்த போது, ''ஜீவனுக்குப் போகிறவாசல் இடுக்கமும் வழி நெருக்கமுமாயிருக்கிறது. அதைக் கண்பிடிக்கிறவர்கள் சிலர்.'' என்று கூறியிருக்கிறார். (மத்தேயு 7:14)

**தேவன் இயற்கையின் மீது ஆளுகை செய்கிறார்:**

தேவன் உலகத்தோடு உறவாடிய வரலாறுதான் வேதம் என்பதை அறிய வேண்டும்.

கர்த்தரையோ சாத்தானையோ, யாரை நேசித்து கீழ்ப்படிவது என்பதை சிந்தித்து முடிவெடுக்கும் உரிமையையும், சுதந்திரத்தையும் மனுக்குலத்திற்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. பெரும்பான்மையான மக்கள் தேவனுக்குக் கீழ்படிவதை விட தன்னைப் போலுள்ள ஒருவனைச் சேவிப்பதையே வசதியாகக் கொண்டிருக்கின்றனர்.

இருந்தபோதிலும், இந்த அண்டசராசரம் முழுமைக்குமான அதிகாரத்தைக் கர்த்தர் தன் கையில் வைத்திருக்கிறார். இயற்கையின் சட்டதிட்டங்களை வகுத்தவரும் அவரே. அவரே கடல்களுக்கு எல்லை வகுத்தவர். 'கடலே நீ இதுவரை வரலாம் மேற்கொண்டு வராதே' என்றும், 'உனது வீம்பான அலைகளை நிறுத்து என்று கூறுகிறவரும் அவரே!

''சர்வத்தையும் தம்முடைய வல்லமையினாலே தாங்குகிறார்" என்று எபிரெயர் 1:1-3 வசனங்களில் பார்க்க முடிகிறது.

**அரசாங்கங்களின் மேல் அதிகாரம் செலுத்துகிறார்:**

உலகில் நல்ல தலைவர்களையோ, தீயவர்களையோ உருவாக்குவதில் தேவன் நேரடியாக ஈடுபடாவிட்டாலும், உலக சம்பவங்களில் தமது அதிகாரத்தைச் செலுத்தி, நற்காரியங்கள் நடைபெறச் செய்யவும், தீய சக்தியுள்ளவர்களை பயன்படுத்தி தேவையான நேரத்தில் மனிதர்களை ஒழுங்குபடுத்தவும், தண்டிக்கவும் செய்கிறார்.

எகிப்து தேசத்தில் இஸ்ரவேல் மக்கள் அடிமைகளாக இருந்தபோது, கர்த்தர் ராஜாவாகிய பார்வோனிடம் பேசி, ''என்னுடைய வல்லமையை உன்னிடத்தில் காண்பிக்கும் படியாகவும், என் நாமம் பூமியிலெங்கும் பிரஸ்தாபமாகும்படியாகவும் உன்னை நிலை நிறுத்தினேன். நீ என் ஜனங்களைப் போகவிடாமல் இன்னும் அவர்களுக்கு விரோதமாய் உன்னை உயர்த்துகிறார்" என்று கேட்கிறதைப் பார்க்கிறோம். (யாத்திராகமம் 9:16,17).

இஸ்ரவேலர்களைப் பார்த்து "இதோ இன்று நான் உங்களுக்கு முன்பாக ஆசீர்வாதத்தையும் வைக்கிறேன். இன்று நான் உங்களுக்கு கற்பிக்கிற உங்கள் தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்தீர்களானால் ஆசீர்வாதமும், எங்கள் தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளுக்கு கீழ்ப்படியாமல், இன்று நான் உங்களுக்கு விதிக்கிற வழியை விட்டு விலகி நீங்கள் அறியாத வேறே தேவர்களைப் பின்பற்றுவீர்களானால் சாபமும் வரும்".

சிலர் சத்தியத்தை தவறாக புரிந்து கிறிஸ்துவை பற்றி (தவறாக) அறிவிக்கும் போது, சத்தியத்தை சரியாக அறிந்த நீ மௌனமாயிருக்கலாமா?

# சிறுவர் பகுதி

## ஓய்வுநாளுக்கும் ஆண்டவர்

**வசனபகுதி : லூக்கா 6 : 1-12, மத் 12:1-14**

**சம்பவ சுருக்கம் :**

பஸ்கா பண்டிகைக்கு பின் வந்த ஒரு ஓய்வு நாளிலே (வாரத்தின் கடைசி நாள்) நமது ஆண்டவர் இயேசுவும் அவருடைய சீடர்களும், பயிர்வழியே நடந்து போனபோது, சீஷர்களுக்கு பசித்தது. அவர்கள் அந்த பயிர்களில் சிலவற்றை பறித்து உண்டார்கள். அதை கண்ட பரிசேயர்கள் வந்து இயேசுவிடம் ஓய்வுநாளிலே யாரும் எந்த வேளையும் செய்யாமல் ஓய்ந்திருக்க வேண்டும். ஆனால், உமது சீஷர்கள் பயிர்களை பறித்து உண்கிறார்களே என்று குற்றம் சாட்டினார்கள். இயேசுவோ, 'ஒரு முறை தாவீதும், அவனுடைய பணியாட்களும் ஆசாரியர் மட்டும் சாப்பிடவேண்டிய தேவசமூகத்து அப்பங்களை சாப்பிட்டார்களே' என்றார். மேலும் மனுஷகுமாரன் (இயேசு) ஓய்வு நாளுக்கும் ஆண்டவராய் இருக்கிறார்' என்றார். பிறகு, இன்னொரு ஓய்வு நாளிலே, ஆண்டவர் ஜெப ஆலயத்தில் பிரவேசித்து உபதேசித்தார். அங்கே, சூம்பின கையுடைய ஒரு மனிதன் இருந்தான். இயேசு அவனை குணமாக்குவாரோ என்று அவர்மேல் குற்றம் சுமத்தும்படி வேதபாரகரும், பரிசேயரும் ஆண்டவரேயே கவனித்துக் கொண்டிருந்தார்கள். ஆண்டவர் அவர்கள் சிந்தனையை அறிந்து, 'ஓய்வு நாளில் நன்மை செய்வதோ, தீமை செய்வதோ உயிரை காப்பதோ, அழிப்பதோ எது நியாயம்' என கேட்டார். அவர்கள் ஒன்றும் சொல்லவில்லை, அவர் அந்த சூம்பின கையுடையவனை சுகமக்கினார். அதனால் அவர்கள் கோபமடைந்து, அவரை கொலை செய்யும்படி ஆலோசனை செய்தார்கள். ஆண்டவரோ, மலையின் மேல் ஏறி இராமுழுவதும் ஜெபம் செய்தார்.

டியர் குட்டீஸ் ! நமது ஆண்டவர் ஓய்வு நாள் கட்டளையை மீறுவதற்காக இவ்வாறு நடந்துக்கொண்டாரா? இல்லையே! பிறகு ஏன்? ஓய்வு நாள் கட்டளையை மாற்றும் படியாக, அதை நிறைவேற்றும்படியாக இப்படி செய்தார். ஏனெனில்! தேவனுக்கு சித்தமானதை செய்ய எந்த ஒரு ஓய்வுநாளும் தடுக்க கூடாது என்பதனை யூதர்களும், நாமும் புரிந்து கொள்வதற்காகத்தான் அப்படி செய்தார். இன்றும் அநேகர் இதனை புரியாமல் ஓய்வுநாளில் (வாரத்தின் கடைசிநாள்) ஆராதனை செய்வது தேவனை வேதனைப்படுத்துவதாகும். நாம் தேவ சித்தம் செய்வோம். தேவன் நம்மை ஆசிர்வதிப்பார். ஆமென்!

**மனன வசனம் : மாற்கு 2:27-28**

"மனுஷன் ஓய்வுநாளுக்காக உண்டாக்கப்படவில்லை, ஓய்வு நாள் மனுஷனுக்காக உண்டாக்கப்பட்டது, ஆகையால் மனுஷகுமாரன் ஓய்வுநாளுக்கும் ஆண்டவராய் இருக்கிறார்."

# நான் தேவனுடைய வார்த்தையை மற்றவர்களுக்கு கற்பிக்கும்போது...

இந்த உலகத்தில் உள்ள அனைவரும் தேவனிடத்தில் இருந்து வந்தவர்களென்றும், இந்த உலகம் முழுவதும் தீமையினால் நிறைந்துள்ளது என்றும் 1 யோ 5:19ல் வாசிக்கின்றோம். ஆனாலும் தேவன், இந்த உலகம் முழுவதற்கும் ஒரு செய்தியை (நற்செய்தி வைத்துள்ளார்; மேலும் அந்த செய்தியை உலக மக்கள் கேட்டு, கீழ்படிந்தால் அவர்களுடைய தீமையிலிருந்து மாற முடியும். மத் 28:19ல் அந்த சிறப்பான செய்தியை, இயேசு தன்னுடைய சீஷர்களுக்கு கொடுப்பதாக பார்க்கிறோம்; "ஆகையால், நீங்கள் புறப்பட்டுபோய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து," என்றார்.

மாற்கு 16:15,16ல் இயேசு இந்த செய்தியை இவ்வாறு கூறுகிறார்,'' ...நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்". அதுமட்டுமல்ல, நாம் மத் 28:20ன் பின் பகுதியை பார்த்தால், தன்னுடைய வார்த்தையை போதிப்பவருடன் தன் பிரசன்னத்தை கொடுத்து ஆண்டவர் அவர்களை ஆசிர்வதிக்கிறார், '.....இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார். ஆமென்."

மற்றும் பவுல், ரோமர் 1:14-16ல் கூறுகையில், "கிரேக்கர்கருக்கும், மற்ற அந்நியர்களுக்கும், ஞானிகளுக்கும், மூடருக்கும் நான் கடனாளியிருக்கிறேன். ஆகையால் ரோமாபுரியிலிருக்கிற உங்களுக்கும் என்னால் இயன்றமட்டும் சுவிஷேத்தைப் பிரசங்கிக்க விரும்புகிறேன். கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவன் எவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலானாயிருக்கிறது.'' என்று இச்செய்தியின் அவசியத்தையும் நமது கடமையையும் கூறுகிறார்.

மிகவும் சாதாரணமானவர்களும் புரிந்து கொள்ள முடியும் என்பதினால், தேவனுடைய உண்மையுள்ள வேலைக்காரர்கள் இந்த சத்தியத்தை (செய்தியை) வெளிப்படுத்துவார்களானால், உலகத்திலுள்ள அநேகர் இருளிலிருந்தும் தீமையிலிருந்தும் வெளிவர முடியும். சங் 119:130 ல், "உம்முடைய வசனத்தின் பிரசித்தம் வெளிச்சம் தந்து, பேதைகளை உணர்வுள்ளவர்'' களாக்கும் என்று வாசிக்கிறோம்.

தன்னுடைய வசனத்தைப் பிறருக்கு சொல்ல வேண்டும் என தேவன் பல

நூற்றாண்டுகளாக கட்டளையிட்டுள்ளார். இந்த உண்மையை வெளிப்படுத்தும் சில வசனங்களை நாம் கவனிக்கலாம்.

**1. இந்த செய்தியை, பெற்றோர் பிள்ளைகளுக்கு போதிக்க வேண்டும் என கட்டளையிடப்பட்டனர்:**

உபகாமம் 4:10ல் யூதர்களுக்கான ஒரு கட்டளை இவ்வாறு கூறுகின்றது, "உன் கண்கள் கண்ட காரியங்களை நீ மறவாதபடிக்கும், உன் ஜீவனுள்ள நாளெல்லாம் அவைகள் உன் இருதயத்தை விட்டு நீங்காதபடிக்கும் நீ எச்சரிக்கையாயிருந்து, உன் ஆத்துமாவைச் சாக்கிரதையாய்க் காத்துக்கொள்; அவைகளை உன் பிள்ளைகளுக்கும் உன் பிள்ளைகளின் பிள்ளைகளுக்கும் அறிவிக்கக்கடவாய்". மேலும், எப்பொழுதெல்லாம் போதிக்க வேண்டும் என உபாகமம் 6:7ல் கூறப்பட்டுள்ளது.

**2. பாவிகளுக்கு, தேவனுடைய வார்த்தையை தேவனுடைய மக்கள் போதிக்க வேண்டும்:**

சங் 25:8ல், சங்கீதக்காரனுடைய வார்த்தைகள் இவ்வாறு கூறுகிறது, ''கர்த்தர் நல்லவரும் உத்தமருமாயிருக்கிறார்; ஆகையால் பாவிகளுக்கு வழியைத் தெரிவிக்கிறார்" மேலும் சங்51:12,13ல் பாவிகளுக்கு தேவ வழியை சொல்லும் உற்சாகத்துடன் தாவீது கூறுகையில், ''உமது இரட்சணியத்தின் சந்தோஷத்தைத் திரும்பவும் எனக்கு தந்து, உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்படி செய்யும். அப்பொழுது பாதகருக்கு உமது வழியை உபதேசிப்பேன்; பாவிகள் உம்மிடத்தில் மனந்திரும்புவார்கள்'' என்றும் கூறுகிறார்.

**3. தேவனுடைய ஜனத்திற்கும் போதிக்க வேண்டும்.**

பல நேரங்களில், தேவனுடைய ஜனங்கள் குளிர்ந்த நிலைக்கு போய், உலகத்திற்கும் அவர்களுக்கும் வித்தியாசமில்லாத நிலையை அடைந்து தேவனை மறந்துவிடுகின்றனர். ஆகையால் தீர்க்கதரிசிகளும் போதகர்களும், அவர்களை மனந்திரும்பச் செய்து தேவனிடம் திரும்பிவரும்படி அனுப்பி வைக்கப்பட்டனர். மேலும் சில தேவனுடைய ஜனங்கள் நன்மைக்கும் தீமைக்கும் உள்ள வித்தியாசத்தைக் கூட உணராமல் போனார்கள். இதை எசேக்கியேல் இவ்வாறு கூறுகிறார், ''அவர்கள் பரிசுத்தமானதற்கு பரிசுத்தமல்லாததற்கும், தீட்டானததற்கும் தீட்டல்லாதற்கும் இருக்கும் வித்தியாசத்தை என் ஜனத்துக்குப் போதித்து, அவர்களுக்குத் தெரியப்பண்ணக்கடவர்கள்'' (எசே 44:23). இதைப்போலவே சிலரைப் பற்றி பவுல், அவர்கள் வளர்ந்திருக்க வேண்டிய விதமாக வளராததைக் குறித்து இவ்வாறு கூறுகிறார், ''காலத்தைப் பார்த்தால், போதகராயிருக்க வேண்டிய உங்களுக்கு தேவனுடைய வாக்கியங்களின் மூல உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்க வேண்டியதாயிருக்கிறது; நீங்கள் பலமான ஆகாரத்தையல்ல, பாலை உண்ணத்தக்கவர்களானீர்கள். பாலுண்கிறவன்

குழந்தையாயிருக்கிறபடியினாலே நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவனாயிருக்கிறான்”

**4. புதிதாய் திருமுழுக்கு பெற்றவர்களும் போதிக்கப்பட வேண்டும்:**

ஒருவர் திருமுழுக்கு பெறுவதற்கு முன்னரே அவருக்கு போதிக்கப்பட வேண்டும்; அப்படியே திருமுழுக்குப் பெற்ற பின்னும் அவருக்கு தொடர்ந்து போதிக்க வேண்டும். இதைப்பற்றி இயேசு மத் 28:20ல் கூறும்போது, “நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார். ஆமென்”. புதிய ஏற்பாட்டு புத்தகங்களில் பல, கிறிஸ்தவர்கள் வளர்ந்து தேவனுடைய உறுதியான வேலையாட்களாக மாறுவதற்கு உதவவே எழுதப்பட்டுள்ளன. இனி தேவனுடைய மக்களுக்கு, தேவனுடனான மற்றும் அவர்களது சக மனிதர்களுடனான கடமைகளைப் பற்றி நினைவுப்படுத்த வேண்டிய அவசியமே இல்லை, என்ற ஒரு நேரம் எப்பொழுதுமே வராது. உதாரணமாக, பணக்காரர்களுக்கு பணத்தின் மீதான அவர்களுடைய நம்பிக்கை தவறு என எச்சரிப்பும் (1 தீமோ 6:17), மந்தையின் மேய்ப்பர்களுக்கு மந்தையாகிய சபையை அழிக்க நினைக்கும் ஓநாய்களைப் பற்றிய எச்சரிப்பும் (அப் 20:29), பலமுள்ளவர்கள், பலவீனமானவர்களுக்கு உதவ வேண்டும் என நினைவுபடுத்துதலும் (ரோ 5:1), எல்லாரும் உலக அன்பிலும் அது தரும் வெகுமதிகளிலும் பிடிபடாதபடியான எச்சரிப்பும் (1 யோ 2:15), மற்ற அனைவரும் ஜெபம் நிறைந்த வாழ்வு வாழவும், இவ்வாறெல்லாம் அறிவுறுத்தப்பட வேண்டும். தேவனுடைய மக்கள் தங்கள் இலட்சியங்களை அடையாமற்போகும்படியான குருடர்களாயிருக்கக்கூடாது.

**5. தவறு செய்பவர்களுக்கும், தவறான உபதேசத்தில் இருப்பவர்களுக்கும் போதிக்கப்பட வேண்டும்.**

அநேகர் தவறிலேயே இருக்கிறார்கள்; ஏனெனில் அவர்களுடைய தவறு அவர்களுக்கு சுட்டிக்காட்டப்படவில்லை என்பதாலேயே! இவர்களுக்கு போதிப்பவர்கள், நிறைய விஷயங்களை பைபிளில் இருந்து சரியாக போதித்தாலும், தங்கள் அறியாமையினால் சிலவற்றை தவறாக போதிக்கிறோம் என்று உணராமலும் கூட செய்கின்றனர். பரிதாபம் என்னவென்றால், சிலர் நன்றாக தெரிந்தே கூட தவறான உபதேசத்தை செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த இரண்டு தரப்பினருக்கும் அவர்களுடைய தவறு சுட்டிக்காட்டப்பட வேண்டும். அப்பொல்லோ என்பவன் ‘தனக்கு தெரிந்த’ எல்லா உண்மைகளையும் போதித்து வந்த ஒரு மனிதன்; ஆனாலும், அவனும் அறிந்து

கிறிஸ்து இல்லாமல் வரும் லாபத்தைவிட,
கிறிஸ்துவினால் வரும் நஷ்டமே அதிக நல்லது.

கொள்ள வேண்டிய சில உண்மைகள் இருந்தன. அப் 18:25ல், " அவன் கர்த்தருடைய மார்க்கத்திலே உபதேசிக்கப்பட்டு, யோவான் கொடுத்த ஸ்நானத்தை மாத்திரம் அறிந்தவனாயிருந்து,....'' என்று கூறப்பட்டுள்ளது. மேலும் வசனம் 26ல், அவன் எவ்வாறு சரியான (இன்னும் தேவையான) விஷயங்களை அறிந்து கொண்டான் என கூறுகிறது.

பாருங்கள்! இந்த அப்பொல்லோவைப் போல இன்று சத்தியத்தை நேசிக்கக் கூடியவர்கள் அநேகர் இல்லை! அதனால் அப்படிப்பட்டவர்கள் தங்களை திருத்திக் கொள்ளவோ, தங்கள் தவறான போதகத்தை சத்திய வசனத்தில் இருந்து அதை வெளிப்படுத்திய பின்னும் விட்டுவிடுவதில்லை. தியத்திராவிலே, தன்னை தீர்க்கதரிசி என்று சொல்லிக் கொண்ட ஒரு பெண், ஏசேபேல். அவள், தேவனுடைய ஊழியர்காரர்கள் வேசித்தனம் பண்ணவும், விக்கிரங்களுக்கு படைத்தவைகளை உண்ணவும் ஊக்கப்படுத்தினாள்; மேலும் அவள் தவறில் இருந்து திருந்தும்படி தருணம் கொடுக்கப்பட்டும் அப்படி செய்யவில்லை. (வெளி 2:20,21).

அன்பானவர்களே! தேவனுடைய வார்த்தையை மற்றவர்களுக்கு போதித்து ஊழியம் செய்பவர்கள் சில வேளைகளில் இரக்கமின்றி நடத்தப்படலாம்; மேலும் அவர்களுடைய தேவனுக்கான உழைப்பிற்கான பூமிக்குரிய பலன் இருக்குமேயென்றாலும், அது குறைவாகத்தான் கிடைக்கும். ஆனாலும் அப்படிப்பட்ட தேவ தாசர்கள், தேவ பிரசன்னத்தையும் ஆசீர்வாதங்களையும் முக்கியமாக எண்ண வேண்டும். அப் 7:52, 53ல் தன்னை துன்பப்படுத்தியவர்களுக்கு ஸ்தேவான் கூறுகையில், ''தீர்க்கதரிசிகளில் யாரை உங்கள் பிதாக்கள் துன்பப்படுத்தாமலிரந்தார்கள்? நீதிபரருடைய வருகையை முன்னறிவித்தவர்களையும் அவர்கள் கொலை செய்தார்கள். இப்பொழுது நீங்கள் அவருக்குத் துரோகிகளும் அவரை கொலைசெய்த பாதகருமாயிருக்கிறீர்கள். தேவதூதரைக் கொண்டு நீங்கள் நியாயப் பிரமாணத்தைப் பெற்றிருந்தும், அதை கைக் கொள்ளாமற் போனீர்கள் என்றான்". நீதிமானாகிய ஸ்தேவானை அந்த யூதர்கள் கொன்றனர்; ஆனாலும் தேவன் அவனை, வானங்கள் திறந்திருக்கிறதையும், மனுஷ குமாரன் தேவனுடைய வலது பக்கத்தில் நிற்கிறதையும் பார்க்கும்படி செய்தார்.

ஆனாலும் நாம், அவருடைய வார்த்தையை போதிக்கிறவர்களுடன் தேவன் இருக்கிறார் என்பதை மறந்துபோக வேண்டாம்.

மனிதனுடைய மீட்பிற்கான (பாவத்திலிருந்து) ஒரே நம்பிக்கை சுவிசேஷம் மட்டுமே! மேலும், அதற்கு கீழ்படிந்தவர்களே அதை வெளிப்படுத்த முடியும். அதை அறிவிப்பதற்கான உரிமையும், பொறுப்பும் இந்த உலகிற்கு கிடையாது.

**– (தமிழில்) கிங்ஸ்லிராஜா**

# பரிசுத்த ஆவியைக் குறித்து ஆராய்வது அவசியந்தானா?



இக்கட்டுரையின் தலைப்பில் குறிப்பிடப்படும் பரிசுத்த ஆவி 'அன்றும், இன்றும் எனும் பதம் பரிசுத்த ஆவியின் அன்றைய (சிருஷ்டிப்பின் நாள் துவங்கி, முதல் நூற்றாண்டின் கடைசி அப்போஸ்தலனின் மரணம் வரை நடப்பித்த பரிசுத்த ஆவியின் நேரடி கிரியைகளையும் இன்றைய (திருமறை நிறைவாகி கிறிஸ்தவத்தில் அமல்படுத்தப்பட்ட நாள் துவக்கம்) பரிசுத்த ஆவியின் விசுவாசத்தினால் உள்ளே வாசம் பண்ணிக் கொண்டுள்ள நாட்களின் செயல்பாடுகளையும் குறிப்பிடப்படுபவை. இப்படித் தான் திருமறை தெளிவான சத்தியங்களைக் கொண்டுள்ளது.

**அன்று ....**

பரிசுத்த ஆவியானவர் மனிதரிடத்தில் வந்து செயலாற்றும் விதம் குறித்து கிறிஸ்து விளக்கம் அளிக்கும் வரை ஆவியானவரைக் குறித்து சரியான புரிந்து கொள்ளுதல் இருக்கவில்லை என்பது தான் யதார்த்தமான உண்மை (யோவான் 14-16 அதிகாரங்கள்; யோவான் 14:22). அடையாளங்களை சாட்சியமாக வைத்து ஆண்டவர் மீதும், அப்போஸ்தலர்கள் மீதும் ஆவியானவர் ஊற்றப்பட்டதன் மூலமே மனிதர்களிடத்தில் ஆவியானவர் நடப்பிக்கும் செயல் தெளிவாக்கப்பட்டது மத்தேயு 3:16,17; யோவான் 1:30,31; அப் 2:1-4; அப் 11:15).

**பரிசுத்த ஆவியானவரைக் குறித்து மூலப் பாஷை கூறுவது என்ன ?**

எபிரேய மொழியில் "ரூ அ" (ru'ah) எனும் பதம் ஆவியைக் குறித்து பயன்படுத்தப்பட்டுள்ளது. 389 முறை பயன்படுத்தப்பட்ட இப்பதத்தில் 136 முறை தேவனோடு தொடர்புபடுத்தி பேசுகிறது. இதன் அடிப்படை பொருள் மூவகைப்படும். அவை 1) காற்று 2) சுவாசம் 3) சக்தி அல்லது பலம்.

வசனங்களை ஒப்பிடுக. (வில்லியம் டைர்னஸ், பழைய ஏற்பாட்டு இறையியல் மையப் பொருள் (பக்கம் 84),

**1. காற்று (ஆதியாகமம் 8:1)**

**2. சுவாசம் (ஆதி 6:17)**

**3. தேவனுடைய பெலம் அல்லது சக்தி (நியா 3:10)**

இவை முடிவாகத் தீர்மானிக்கப்பட்ட பதங்களல்ல; மாறாக இடத்துக்கேற்ப பொருள் கொள்ளப்பட வேண்டியவை.

1) சங்கீதம் 78:39-ல் காற்றையும், சுவாசத்தையும் 'ரூ அ' என குறிப்பிடுகிறது.

2) 1 இராஜாக்கள் 18:12-ல் தேவனுடைய பெலமாகவும் சுவாசமாகவும் "ரூ அ" பொருள்படுகிறது.

3) எசேக்கியேல் 3:17ல் காற்று, சுவாசம், தேவ பெலன் ஆகிய மூன்றையும் ''ரூ அ'' உள்ளடக்கிய பொருளின் பேசுகிறது.

இவைகளை மிகுந்த நிதானத்துடன் பகுத்து படித்தால் மட்டுமே சரியான புரிந்து கொள்ளுதலைப் பெற முடியும்.

**கிறிஸ்தவ மார்க்கத்தின் தோற்றத்துக்கு முன்...**

ஆதிகாலங்களில் (ru'ah) 'ரூ அ' எனும் பதம் பயன்படுத்தப்பட்ட போது, இயல்பான காற்றுக்கும், இயற்கைக்கு அப்பாற்பட்ட காற்றுக்கும் இருந்த (Super Natural Wind) வித்தியாசத்தை மனிதர்கள் புரிந்து கொள்ள முடியவில்லை. மோசே எகிப்தில் தேவனுடைய வல்லமையை வெளிப்படுத்தும் பொருட்டு, நடப்பித்த 10 வாதைகளை வாசிக்கிறோம். அவற்றில் பூமியிலெங்கும் (எகிப்தில்) வெட்டுக்கிளிகளை வரப் பண்ணியதும் ஒரு வாதை (யாத்திராகமம் 10:13). "அப்படிய மோசே தன் கோலை எகிப்து தேசத்தின் மேல் நீட்டினான்; அப்பொழுது கர்த்தர் அன்று பகல் முழுவதும் அன்று இராத்திரி முழுவதும் கீழ்காற்றை தேசத்தின் மேல் வீசப் பண்ணினார்; விடியற்காலத்திலே கீழ் காற்று வெட்டுக்கிளிகளை கொண்டு வந்தது."

இவ்வசனத்தின் அடிப்படையில் (ru'ah) "ரூ அ" எனும் பதம் கீழ்காற்றுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. நமது கேள்வியெல்லாம், வெட்டுக்கிளிகளை கொண்டு வந்த வல்லமை எதிலே இருந்தது என்பதுதான்.

**1. மோசே நீட்டின கோலிலா ?**

**2. வெறும் கீழ்காற்றிலா?**

**3. அன்றாட நிகழ்வா அல்லது அற்புதமா?**

**4. 'ரூ அ' என அழைக்கப்பட்ட ஆவியின் பெலனா?**

ஒருவர் கிறிஸ்தவராய் இவ்வுலகில் வாழ்வதற்கு தேவனுடைய சத்தியம் ஒன்றே போதுமானது. ஏனெனில், வேதகாமத்தை விட மேலானது ஒன்றுமே இல்லை.

தேவனுடைய ஆவியின் பெலனே, அற்புதத்தைச் செய்தது.

2சாமுவேல் 22:16லும், யாத்திராகமம் 15:8,10 வசனங்களிலும், "கர்த்தருடைய கண்டிதத்தினாலும், அவருடைய நாசியின் (ரூ அ) சுவாசக் காற்றினால் சமுத்திரத்தின் மதகுகள் துறவுண்டு பூதலத்தின் அஸ்திபாரங்கள் காணப்பட்டது.'' ''உமது நாசியின் சுவாசத்தினால் ("ரூ அ") வெள்ளம் குவியலாக நிமிர்ந்து நின்றது; ஆழமான ஜலம் நடுக்கடலிலே உறைந்து போயிற்று... உம்முடைய காற்றை வீசப்பண்ணினீர், கடல் அவர்களை மூடிக்கொண்டது; திரளான தண்ணீர்களில் ஈரம் போல் அமிழ்ந்து போனார்கள்," என்று வாசிக்கிறோம். இங்கே தேவனுடைய சுவாசக் காற்று "ரூ அ'' அற்புதம் நடப்பித்ததை குறிப்பிடுகிறது. ஆகிலும் பரிசுத்த ஆவியின் நபர் தத்துவம் இவைகளில் காணவில்லை அல்லவா? அப்படியானால் பரிசுத்த ஆவி ஒரு சக்தியின் வெளிப்பாடா,?

இக்குழப்பத்திற்கு தெளிவைத்தான் ஆதியாகமம் 1:2-ல் வாசிக்கிறோம். சிருஷ்டிப்பின் வரலாற்றிலே ''தேவ ஆவியானவர்'' அசைவாடிக் கொண்டிருந்த காட்சி விவரிக்கப்படுகிறது. அடை காக்கும் கோழி முட்டைகளிலிருந்து விரைவில் குஞ்சுகளை பொறிக்கச் செய்வது போல "வெறுமையும்" ஒழுங்கின் மையாயும் இருந்த இருளின் ஆழத்திலிருந்து சிருஷ்டிகள் உருவாக ஆவியானவரின் பங்கு நபர்த்தத்துவத்தில் குறிப்பிடப்படுகிறது.

மேலும் நியாயாதிபதிகள் பெலன் பெற்று யுத்தத்தில் ஜெயிக்கவும், (நியாயநீதிபதிகள் 3:10, 6:34), தேவனுடைய ஆவியானவர் இறங்கினது மூலம் (எசேக்கியேல் 11:15), இப்படியாக அன்று ஆசரிப்புக் கூடாரத்தைக் கட்டத் தேவையான புத்தியும் ஞானமும் உண்டாக தேவ ஆவியினால் கர்த்தர் நிரப்பினார் (யாத்திராமம் 31:1-5). சொப்பனங்களுக்கு அர்த்தம் சொல்லி நிறைவேறியதன் மூலம் ஆவியினால் அருளப்பட்டது உறுதியாக்கப்பட்டது (ஆதியாகமம் 41:38). எண்ணெயால் அபிஷேகம் பண்ணப்பட்டு தீர்க்கதரிசன வரத்தையுடையவர்களான சவுலும் ஆசாரியர்களும், (1 சாமுவேல் 10:1,6; 15:1; 16:12) தேவ ஆவியினால் நிரப்பப்பட்டவர்களே. (எண் 24 : 2,9) (பின்னதாக பரிசுத்த ஆவி சவுலை விட்டு பிரிந்தார்.)

ஆகிலும் அன்று தேவன்மேல் கை கொண்ட அனைத்து மக்கள் மேலும்

ஆவியானவர் ஊற்றப்பட்டு அல்லது இறங்கி மேற்குறிப்பிட்ட அற்புதங்களை தேவன் நடப்பித்தாரா? இல்லை! பின் வரும் வசனக் கருத்துக்கள் இதை மெய்ப்பிக்கிறது.

“அதற்கு மோசே, ... கர்த்தருடைய ஜனங்கள் எல்லாரும் தீர்க்க தரிசனம் சொல்லத்தக்கதாக கர்த்தர் தம்முடைய ஆவியை அவர்கள் மேல் இறங்கப் பண்ணினால் நலமாயிருக்குமே, என்றான்'' (எண்ணாகமம் 11:29); எல்லார் மேலும் ஆவியானவர் ஊற்றப்பட வேண்டும் என்பது மோசேயிக்கு விருப்பம்தான். ஆனால் நிகழ்ந்ததா? ‘இல்லையே’

இந்த உண்மையைத்தானே பவுலும் புதிய ஏற்பாட்டில் விளக்கப்படுத்தினார். ஊமையான விக்கிரகம் ஏவுவதாக நினைத்து உளறிக் கொண்டிருந்த கொரிந்து பட்டணத்து மக்கள் மனமாறி கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டபின்னும் அப்படிப்பட்ட உளரலை விட மனதில்லாமல், ஆவியானவர் தங்களை ஏவுவதாக நினைத்து உளறினார்கள். அது பொய்யான கற்பனை என உணர்த்தும்படி பவுல், ‘‘எல்லாரும் அப்போஸ்தலர்களா? எல்லோரும் தீர்க்கதரிசிகளா? போதகர்களா? எல்லாரும் அற்புதங்களைச் செய்கிறவர்களா? எல்லாரும் குணமாக்கும் வரங்களையுடையவர்களா? எல்லாரும் அந்நிய பாஷைகளைப் பேசுகிறார்களா? எல்லாரும் விளக்கியானம் பண்ணுகிறார்களா?” இக்கேள்விகளுக்கான ஒரே பதில் “இல்லையே” என்பது தான். (எபி 2:4; 1கொரி 12:1-3, 11,27-31). ஆதலால் இவைகளைப் பார்க்கிலும் அதிக மேன்மையான வழிகளை நாடுங்கள் என்பதன் மூலம், பரிசுத்த ஆவியின் வரங்களைக் காட்டிலும் 13-ம் அதிகாரத்தில் அன்பை நாடுங்கள் என்று குறிப்பிடுகிறார்.

மனிதனுக்கு நலமாகத் தோன்றுகிற எல்லாவற்றையும் கர்த்தர் கொடுப்பாரா? (யாக்கோபு 4:3). பரிசுத்த ஆவியின் விஷயத்திலும் இது உண்மையல்லவா? சிந்திப்பீர். (1கொரிந்தியர் 12:11).

- **சகோ. இ.ஏ. ஆறுமுகம்**,
திண்டுக்கல்

நாம் யாருக்காவது போதிக்க விரும்பினால் தேவனுடைய வார்த்தையை மட்டுமே போதிக்க வேண்டும். ஏனெனில், தேவனுடைய சத்தியத்தை தவிர வேறொன்றும் அவரை நித்தியத்திற்கு கொண்டு செல்ல முடியாது.

# இயேசு தீர்வு என்று நாம் எவ்விதம் அறிகிறோம் ?



தேவன் இருக்கிறார் என்பதை நம்பாமலிருப்பது முடியாத காரியம் என்றுணர்ந்த மக்கள் அநேகம் பேர் இருக்கிறார். ஆனாலும் இயேசு கிறிஸ்துவுக்காக தங்கள் வாழ்க்கையை அர்பணிப்பது அவசியம் என்பதை மறுதலிக்க முயற்சி செய்யும் அநேக மக்களும் இருக்கிறார்கள். இதன் விளைவாக தேவனை உண்மையாக சேவிப்பதற்கு அவர்கள் யாருக்கும், எதற்கும், எப்போதும் உதவுவதில்லை. ஆனால் தேவனை சேவிப்பது பற்றிய எண்ணம் சிறிதுமின்றி மன நிறைவுடன் இவ்வுலகத்தில் தங்கள் வாழ்க்கையை நடத்துகிறார்கள்.

தேவன் இருக்கிறார் என்பதை நாம் அறிந்து கொள்ள வழிகள் உண்டு. இந்தப் பாடத்தில் நாம், இயேசுவே 'கிறிஸ்து' என்றும் தேவனுடைய குமாரன் என்றும் அறியக் கூடிய வழிகளைக் குறித்து கவனம் செலுத்துவோம்.

முதலாவது காரியம் நம்முடைய முந்தைய பாடங்களில் வேதாகமத்தை மனிதர்கள் தாங்களே எழுதிக் கொள்ளவில்லையென்றும், மாறாக அது தேவனால் ஏவப்பட்டு எழுதப்பட்ட வார்த்தைகள் என்பதையும் நாம் பல ஆதாரங்களுடன் கண்டோம். வேதாகமம் இயேசுவை கிறிஸ்து என கூறுவதினால் உண்மையில் இயேசு நீதியுள்ளவர் என்று நாம் அறிய முடிகிறது. இதை நிரூபிக்க மேலும் பல சான்றுகள் உள்ளன.

**கிறிஸ்துவைப் பற்றின கூற்றுகளும் அவைகளின் நிறைவேற்றமும்.**

| | | |
|---|---|---|
| 1. அவர் தமது ராஜ்ஜியத்தை (ரோம ராஜாக்களின் நாட்களில் ஸ்தாபிப்பார் | தானி 2:44 | லூக் 2:1-7 |
| 2.மரித்தோரிலிருந்து அவர் எழுப்பப்படுவார். | சங் 22:6 | மத் 28:1 மாற் 16:1 லூக் 24:1 யோ 20:1 |
| 3.அவருடைய கைகளும் கால்களும் உருவக்குத்தப்படும். | சங் 22:16 | லூக் 23:33 |
| 4. அவர் மௌனமாகப் பாடுபடுவார். | ஏசா 53:4-7 | மாற் 15:2-5 மத் 26:63 |
| 5. அவர் பிணியாளிகளை சொஸ்தமாக்குவார். | ஏசா 53:4 | மத் 8:17 |
| 6. அவர் கன்னியிடமிருந்து பிறப்பார். | ஏசா 7:14 | லூக் 1:26-35 |
| 7. அவருடைய எலும்புகள் முறிக்கப்படுவதில்லை. | சங் 34:20 | யோ 19:31-37 |

| | | |
|---|---|---|
| 8. அவரை காட்டிக் கொடுத்தவன் பணத்தை திரும்ப செலுத்துவான். | சகரி 11:12 | மத் 27:3-10 |
| 9. அவர் தன் சீடனால் காட்டிக் கொடுக்கப்படுவார். | சங் 41:9 | மாற் 14:43-49 |
| 10. அவர் சவுக்கால் அடிக்கப்பட்டு முகத்தில் அரையப்பட்டு காறித்துப்பப்படுவார். | ஏசா 50:6 | மத் 26:67 - 27:31 |
| 11. அவர் கசப்பையும் காடியையும் ருசி பார்ப்பார். | சங் 69:21 | மத் 27:33-34 |
| 12. அவருடைய உடை சீட்டுப் போட்டுப் பங்கிடப்படும். | சங் 22:18 | யோ 19:23-24 |

இந்த அட்டவணை இயேசுவைப் பற்றி சில காரியங்களை விளக்கிக் காட்டுகிறது. தம்மைப் பற்றி சிலர் உரிமை கொண்டாடுபவை உண்மையாக இருந்தால் ஒழிய அட்டவணையில் குறிப்பிடப்பட்டவை நம்புவதற்கு கடினமாகவும் உண்மையுள்ளதாகவும் போய்விடும். இயேசு யாரென்றும் அவருக்கு என்ன நேரிடும் என்றும் பழைய ஏற்பாட்டில் எண்ணற்ற தீர்க்க தரிசனங்கள் உள்ளன. அவைகளில் சில இந்த அட்டவணையில் இடது புற பத்தியில் காணப்படுகின்றன. அதற்கு வலது புறத்தில் உள்ள பத்தியில் அந்த கூற்றுகள் பழைய ஏற்பாட்டின் எந்த பகுதியில் உள்ளன என்பது குறிப்பிடப்பட்டுள்ளது.

இயேசு இந்த தீர்க்க தரிசனங்களை எவ்விதம் நிறைவேற்றினார் என்பதற்கு புதிய ஏற்பாட்டில் எண்ணற்ற கூற்றுக்களும் வரலாற்று குறிப்புக்களும் உள்ளன. நீங்கள் இவை ஒவ்வொன்றையும் அதற்குரிய வேதவசனங்களையும் படித்துணரும்படி நாங்கள் உங்களை ஊக்கப்படுத்துகிறோம்.

பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டவைகளுக்கும், புதிய ஏற்பாட்டில் அவைகளின் நிறைவேற்றத்திற்கும் இடையே குறைந்தது 400 வருட இடைவேளி இருந்தது என்பதை நினைவில் வையுங்கள். ஒரு வேளை அந்த இடைவேளி ஆண்டு அதிகமாகக்கூட இருக்கும். இப்பொழுதிருந்து 400 ஆண்டுகளுக்கு பின்பு அதாவது 2400ம் வருடத்தில் வாழப்போகிற ஒரு நபரை பற்றிய காரியங்களை எவ்விதமாய் முன்னுரைக்க விரும்புகிறீர்கள்? இங்கே கொடுக்கப்பட்டவைகள் போல மிக நுட்பமான முறையில் அனைத்தையும் நீங்கள் முன்னுரைக்க முடியும் என்று கருதுகிறீர்களா? இதற்கான விடை மிகவும் தெளிவானது. இயேசு தேவனுடைய குமாரனாக இருந்தால் மாத்திரமே இவை யாவும் உண்மையாகக் கூடும்.

நாம் கொலை செய்யக் கூடாது என்று மட்டும் இயேசு கூறவில்லை;
நாம் கோபம் கொள்ளவோ, வெறுப்படையவோ கூடாது என்று கூறுகிறார்.

இயேசு இப்பூமியில் வாழ்ந்தார் என்பதை நாம் அறிந்து கொள்ள இன்னொரு வழி, அக்காலத்தில் வாழ்ந்த மாபெரும் சரித்திர நிபுணர்கள் எழுதிய வரலாற்று நூல்களை படிப்பதுதான். இந்த நாட்களில் நடப்பதை பல வருடங்களுக்கு பிறகு வாழப்போகும் மனிதர்கள் அறியக்கூடிய வகையில் இன்றைக்கு பல பத்திரிகைகளும், தொலைக்காட்சிகளும் நிகழ்ச்சிகளை பதிவு செய்கின்றன. அதைப்போன்றே, இயேசு வாழ்ந்த காலத்தில் மனிதர்கள் எழுத்திலும், அவர்கள் வரைந்த படங்களிலும் நிகழ்ந்த காரியங்களை பதிவு செய்தனர்.

கீழுள்ள அட்டவணையில் வேதாகமத்தில் கூறப்பட்டுள்ளவை சரியென்று நிரூபிக்கும் வகையில் காரியங்களை பதிவு செய்திருந்த மனிதர்களின் பெயர்கள் உள்ளன.

| | | |
|---|---|---|
| இக்னேஷியஸ் | கிளமென்ட் | சியோட்டோனிஸ் |
| போலிகார்ப் | பாப்பியஸ் | பிளீனி |
| பர்னபாஸ் | பசிலிட்ஸ் | ஹெகேஸிப்பஸ் |
| ரோமாபுரி கிளமென்ட் | ஒரிகன்பி | லூசியன் |
| ஹெர்மஸ் | சீப்பிரியன் | ஜூலியன் |
| கிரேனியு | ஜோசப்பஸ் | ஹேரோக்லெஸ் |
| ஜஸ்டின் மார்டையர் | டாசிட்டஸ் | செல்ஸஸ் |
| தெர்த்துல்லியன் | கிப்பன் | பெர்ஃபைரி |

இது எவ்வளவாய் ஏற்றுக்கொள்ளத்தக்கதாய் இருக்கிறது என்பதற்கு நாம் ஒரு உதாரணத்தை பயன்படுத்துவோம். பிளாட்டோவை நீங்கள் நம்புகிறீர்களா? பிளாட்டோ பல ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஒரு மாபெரும் தத்துவ மேதை என்பதை அநேக மக்கள் அறிவார்கள். இருந்த போதிலும் பிளாட்டோவின் வாழ்க்கையைப் பற்றி நமக்கு அறிவிப்பதற்கு குறிப்புக்களை எட்டே எட்டு சரித்திர ஆசிரியர்கள் தான் எழுதி வைத்துள்ளனர். நீங்கள் சாக்கரட்டீசை நம்புகிறீர்களா? இந்த பூமியில் இருந்த மாபெரும் சிந்தனையாளர்களில் அவரும் ஒருவர் என்பதால் ஏறக்குறைய நாம் அனைவருமே நமது பள்ளிப்பாடங்களில் அவரைப்பற்றி கற்றிருக்கிறோம். ஆனால் அவரைப்பற்றி வெறும் 12 சரித்திர நிபுணர்களே எழுதி வைத்துள்ளனர் என்பதை வெகு சிலரே அறிவார்கள்.

இப்பொழுது கேள்வி என்னவென்றால் நீங்கள் கிறிஸ்துவை நம்புகிறீர்களா? 1000க்கும் மேற்பட்ட சமய சார்பற்ற எழுத்தாளர்கள் இவரைப் பற்றி ஒரே விதமாக எழுதி வைத்துள்ள வரலாற்று உண்மைகள் வேதாகமத்தில் காணப்படுவைகளோடு முழுவதும் ஒத்துப்போகின்றன. இவர்கள் கிறிஸ்துவர்களல்ல, ஆனால் வரலாற்றில் இவர்கள் வாழ்ந்த காலகட்டங்களில் இவைகளை எழுதினார்கள். வேதாகமத்தின் உறுதிபாட்டிற்கு இது மிக நல்ல ஆதாரம் என்பது மிகத்தெளிவாகும்.

இயேசு வாழ்ந்தார் என்பதை நாம் அறிந்து கொள்ள மற்றொரு வழி புதைபொருள் ஆராய்ச்சி மூலம் கற்கப்பட்டவைதான். எடுத்துக்காட்டாக லூக் 2:1 ஐ பார்ப்போம். இங்கு இயேசுவைப் பற்றி குறைந்தது மூன்று காரியங்கள் சொல்லப்படுகின்றன. முதலாவது அந்நாட்களில் குடிமதிப்பு எழுதப்படும்படி ஒரு கட்டளை பிறப்பிக்கப்பட்டது. இது அந்நாட்களில் நடைபெற்ற மக்கள் தொகை மதிப்பீடாகவும், வரி வசூலிப்பாகவும் இருந்தது.

இரண்டாவது: இக்காரியம் சிரேனியு என்பவன் சீரியா நாட்டின் தேசாதிபதியாக இருந்த போது நடைபெற்றது என நமக்கு கூறப்படுகிறது. மூன்றாவது: ஒவ்வொருவரும் தங்கள் சொந்த ஊருக்குப் போக வேண்டியிருந்தது என்றும், நமக்கு கூறப்படுகிறது . 100 வருடங்களுக்கு முன்பு பல சரித்திர நிபுணர்கள் இது முட்டாள் தனமானது என்றும் இது உண்மையாக இருக்க முடியாதென்றும் நினைத்தனர். ஆனால் பாலஸ்தீனத்திலும் மற்ற இடங்களிலும் கிடைத்த புதை பொருட்கள் இந்த கூற்றுக்கள் ஒவ்வொன்றும் உண்மையென்று நிரூபித்துள்ளன. புதை பொருள் ஆராய்ச்சியாளர்களால் சில வருடங்களுக்கு முன்பே இக்காரியம் கண்டுபிடிக்கப்பட்டது. இக்காரியங்கள் பற்றி நுட்பமாக லூக்காவினால் அப்போதே எழுத முடிந்திருக்கிறதென்றால், நிச்சயமாகவே இயேசு கிறிஸ்துவைப் பற்றி லூக்கா எழுதின மற்ற குறிப்புகள் யாவும் மிக நுட்பமானவையாயும் சரியானவையாகவும் இருக்க வேண்டும்.

கடைசியாக, நாம் இங்கே குறிப்பிடுகின்ற காரியம் இயேசுவின் போதனைகளில் உள்ள ஞானம்; அது நமது ஜீவியத்தில் கிரியை செய்கிற ஆதாரமாயிருக்கிறது. இப்போதை விட உங்கள் பிற்கால வாழ்க்கைக்கு இவைகளில் சில உண்மைகள் உங்களுக்கு இன்னும் அதிகமாய் தெளிவாகும்.

எடுத்துக்காட்டாக, ஒருவர் மத்தேயு 5ம் அதிகாரத்திலுள்ள மலைப்பிரசங்கத்தை படிக்கும்போது, வேறெந்த மனிதர்களில் சிந்தனையிலும் வரமுடியாத முற்றிலும் மாறுபட்ட போதனையை காணமுடியும்.

உதாரணத்திற்கு, மத்தேயு 5'21 லிருந்து சில வசனங்களைத் தொடர்ந்து பார்த்தால், கொலை செய்தல் என்ற பிரச்சனைக்குத் தீர்வு நமக்குக் கூறப்பட்டுள்ளது. நாம் கொலை செய்யக் கூடாது என்று மட்டும் இயேசு கூறவில்லை; நாம் கோபம் கொள்ளவோ, வெறுப்படையவோ கூடாது என்று கூறுகிறார். ஒருவரும் கோபம்

அல்லது வெறுப்பு கொள்ளவில்லையென்றால், கொலை செய்தல் எப்போதுமே இருக்காது. வசனங்கள் 21 முதல் 26 வரை படிக்கவும்.

விபச்சாரம் என்ற தவறான பாலுறவை எப்படி களைவது என்பதை இயேசு இங்கே கூறுவதையும் நாம் காண முடியும். 28ம் வசனத்தில், நாம் ஒருவரை இச்சையுடன் பார்க்கக்கூடாது என்றும், நமது இச்சையான பார்வை அடுத்தவரின் மேல் நமது தவறான எண்ணத்தை உண்டாக்குகிறது. அதன் விளைவாக தவறான செயல்களுக்கே வழி வகுக்கும். ஒருவர் தன் சரீரப் பிரகாரமாக தவறு செய்வதற்கு எண்ணம் கொள்ளாமலிருந்தால், அவர் எப்போதும் தவறே செய்யாமலிருப்பார்.

இவ்விதமான இன்னொரு எடுத்துக்காட்டு மத் 5.43 லிருந்து தொடங்குகிறது. நம்மில் பலருக்கு இது மிகவும் கடினமான கட்டளையாய் தெரிகிறது. நாம் பிறரையும் மற்றும் எதிரியையும் நேசிக்கும்படி இதில் கூறப்படுகிறது. மக்கள் இதை கைக்கொண்டிருந்தால் பூமியில் நீண்ட நாட்களுக்கு முன்பே நாம் யுத்தத்தாலும், கலவரத்தாலும் நேர்ந்த பிரச்சனைகள் எல்லாவற்றையும் தீர்த்திருக்க முடியும்.

இந்நாளில் மனிதரை வாதிக்கக்கூடிய பல பிரச்சனைகளைத் தவிர்க்கும் வழிகளை இயேசு நமக்குத் தருகிறார். அவரது உபதேசங்கள் மிகவும் அருமையானதாகவும் மிகுந்த ஞானத்துடனும் இருக்கின்றன. அவைகள் ஒரு மாபெரும் மனிதனிடமிருந்து மட்டுமே வந்திருக்கும் என்று ஒருவராலும் நம்ப முடியாது.

அதுமட்டுமல்ல, இயேசு தேவனுடைய குமாரனென்றும் அவரே சத்தியமானவர் என்றும் அறியலாம். ஏனென்றால் நம்முடைய சொந்த வாழ்க்கையில் அவர் வாழ்ந்து கொண்டிருப்பதை காண முடியும். கிறிஸ்தவர்கள் திரும்ப திரும்ப தேவனிடத்தில் ஜெபிக்கும்போது தங்களது பிரச்சனைகளுக்குத் தீர்வு காண இயேசுவை உதவும்படி வேண்டும்போது, தேவன் தங்கள் ஜெபத்திற்கு ஆச்சரியமான வகையில் பதில் அளிப்பதை அவர்களால் காண முடியகிறது. சில சமயங்களில் நமது ஜெபங்களுக்கான பதில் நாம் எதிர்பாராததாயிருந்தாலும், நமது ஜெபத்திற்கு பதில் கிடைக்கிறது என்பதை நாம் காணமுடியும். “நீதிமானின் ஊக்கமுள்ள ஜெபம் கேட்கப்படுகிறது” என்று நமக்குக் கூறப்பட்டுள்ளது. மேலும் முந்தைய பாடத்தில் நாம் படித்தபடி “தேவன் உண்மையுள்ளவராய் இருக்கிறார், நமது திராணிக்கு மேலாக நாம் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடம் கொடாமல் சோதனையைத் தாங்கத்தக்கதாக சோதனையோடு கூட அதற்குத் தப்பித்துக்கொள்ளும்படியான போக்கையும்

உண்டாக்குவார்'' என்றும் நமக்குக் கூறப்பட்டுள்ளது. இந்த தப்பித்துக்கொள்ளும்படியான போக்கிற்காக நாம் நோக்கும்போது அது நிச்சயமாய் தேவனிடத்திலிருந்தே வருகிறது என்பதை காண்கிறோம். நாம் நமது இருதயத்தை தேவனை நோக்கி திறக்கச் சித்தம் கொண்டிருந்தால் தேவன் செயல்படுகிறவராய் இருக்கிறார் என்பதையும் நமது வாழ்வில் அவர் கிரியை செய்கிறார் என்பதையும் இந்த நிகழ்ச்சிகள் நமக்கு நிச்சயமாய் விளங்கச் செய்யும்.

இந்தப் பாடங்களின் வரிசையில் தேவன் இருக்கிறார் என்பதற்கான ஆதாரங்களை நாம் கற்றிருக்கிறோம். பரிணாமத்தையும் இன்னும் சில பிரச்சனைகளையும், அதாவது தேவன் உண்மையானவரல்ல, வேதாகமம் அவர் வார்த்தையல்ல என்று நம்மை நம்பச் செய்ய மக்கள் மேற்கொள்ளும் முயற்ச்சிகளையும் பார்த்தோம். இவர்கள் முயற்சிகளெல்லாம் வீணானதே என்று நாம் கண்டோம். ஏனென்றால் தேவன் இருக்கிறார், வேதாகமம் அவருடைய வார்த்தை. இதற்கு நிறைய சிறந்த ஆதாரங்கள் உண்டு. இதை மறுப்பவர்கள் மதியீனராய்த்தான் இருக்கவேண்டும்.

இந்தக்கடைசி பாடங்கள் சிலவற்றில் தேவனுடைய ஞானத்தையும், அவர் காரியங்களைச் சீராக அமைத்திருப்பதையும், இயேசு நமது வாழ்க்கையில் கிரியை செய்ய உதவுகிறார் என்பதையும் கூட பார்த்தோம். நீங்கள் உங்கள் வாழ்க்கையைத் தேவனுக்கென்று ஒப்புக் கொடுத்திருக்கிறீர்களா?

நீங்கள் கிறிஸ்தவராகிவிட்டீர்களா? தேவன் உங்கள் வாழ்க்கையின் பிரச்சனைகளில் தீர்வுகாண, அவரை உதவி செய்ய வேண்டுவதின் மூலம் அவர் எவ்வளவு வல்லமை உள்ளவராயிருக்கிறார் என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர வேண்டும். மற்றவர்கள் உணர நீங்கள் மாறியிருக்கிறீர்களா? தேவனை சார்ந்திருப்பதும் தேவனுடைய பிள்ளைகளில் ஒருவராய் நாம் இருப்பதும் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

– முற்றும்

**– தமிழில் (சகோ. சாமுவேல் ராஜ்)**

சத்தியமங்கலம்

1000க்கும் மேற்பட்ட சமய சார்பற்ற எழுத்தாளர்கள் இயேசுவைப் பற்றி ஒரே விதமாக எழுதி வைத்துள்ள வரலாற்று உண்மைகள் வேதாகமத்தில் காணப்படுவைகளோடு முழுவதும் ஒத்துப்போகின்றன.

# உங்களுக்கு ஈஸியான (எளிமையான) வழியிலா பரலோகம் வேண்டும்

**Do you want Heaven the easy way?** - Jerry Bates

உங்களுக்கு பரலோகம் ஈஸியா வேண்டுமா? இந்தக் கேள்விக்கு நம்மில் அநேகர், “ஆம்” என்று பதிலளிப்போம். நிச்சயமாக நாம் அனைவரும் ஒரு நாளில் பரலோகம் போக வேண்டும் என விரும்புகிறோம்; ஆனால் அதற்காக நிறைய தியாகமும் பண்ணக் கூடாது என்றும் நினைக்கிறோம். ஒரு துடிப்பான இளைஞன் இந்த உலகில் மிகச்சிறந்த இடத்தை தொழில் ( Business ) மூலம் அடைய விரும்பினான். அதனால் அவன், ஒரு கோடீஸ்வர தொழிலதிபரிடம் போய் அவருடைய வெற்றிக்கான காரணம் என்ன? என கேட்டான். தயக்கமில்லாமல் அந்த தொழிலதிபர் கூறியது, ‘‘கடின உழைப்பே!’’ என்று! ஒரு நீண்ட யோசனைக்குப் பின் அந்த வாலிபன் அவரிடம், ‘‘சரி வேறு காரணம் கூறுங்கள்!” என்றான். இதன் மூலம் நாம், அந்த வாலிபன் கடினமாக உழைத்து, உயர்ந்த நிலையை அடைய மனதில்லாதிருந்தான் என பார்க்கிறோம்.

சாத்தானும் கூட இயேசுவை, எளிமையாக வெற்றிப்பெறும்படி தூண்டுகிறான். மத் 4ல், இயேசு சந்தித்த மூன்று சோதனைகளைப் பற்றி நாம் காண்கிறோம். அந்த மூன்று சோதனைகளையும் நாம் எவ்வாறு கூறலாம் எனில், சாத்தான் இயேசுவுக்கு உடனடி வெற்றி, உடனடி வசீகரம் மற்றும் உடனடி திருப்தியையும் ஒரு செலவுமில்லாமல் (முயற்சியின்றி) தர விரும்பினான். அன்றைக்கு சாத்தான் சொன்னபடியே இயேசு செய்திருந்தால், மனிதனிடமிருந்து கிடைக்கும் துதியையும், மரியாதையையும் பெற அவர் சிலுவைக்கு சென்றிருக்க வேண்டியதில்லை!

பாருங்கள் இயேசுவின் சீடர்கள் கூட ஒரு முறை எளிதான வழியே எதிர்நோக்கியிருந்தனர். மத் 16:13ல் இயேசு தம்முடைய சீடர்களிடம், ‘‘...மனுஷகுமாரனாகிய என்னை ஜனங்கள் யார் என்று சொல்லுகிறார்கள் என்று கேட்டார்”. அதற்குப் பேதுரு உற்சாகமாக வசனம் 16ல், ‘‘நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான்”. பின்பு இயேசு, தன்னுடைய பேச்சின் போக்கை (கருத்தை) மாற்றினார். வசனம் 21ல் அவர் தம்முடைய சீடர்களிடம், தான் அநேக பாடுகள் பட வேண்டும் என்றும், அதன் விளைவாக மரிக்க வேண்டும் என்றும் பேசத் தொடங்கினார். இயேசு இத்தகைய கருத்து பேதுருவுக்கு பிடிக்கவில்லை. இயேசு தனியாக கூட்டிக் கொண்டுபோய் அவன் அவரைக் கடிந்து கொண்டான். அதை யோசித்துப் பாருங்கள்! இயேசு தேவனுடைய குமாரன் என்று

தைரியமாக அறிக்கை செய்தபின்னும் (அதற்கு, இயேசு தெய்வீகமானவர் என்றும் பொருள்படும்) தான் தேவனுக்கு யோசனை சொல்ல முடியும் என பேதுரு நினைத்திருக்கிறான். அவன் கூறியது, "... இது உமக்கு நேரிடக்கூடாதே, இது உமக்குச் சம்பவிப்பதில்லை என்று..." கூறினான். அதற்கு இயேசு, தான் இதுவரை பேசியிராத அளவு கடினமாக அவனுக்கு, "எனக்குப் பின்னாகப்போ, சாத்தானே, நீ எனக்கு இடறலாயிருக்கிறாய்; தேவனுக்கு ஏற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறாய்" என்றார்.

இதன் மூலம் இயேசு, பரலோகத்திற்கான பாதை எளிமையானதல்ல என தெளிவுபடுத்துகிறார். ஆம், இயேசுவே அவ்வழியை உண்டாக்கினார்; ஆனாலும் அவர், அந்த வழி எளிமையானதாக (easy) இருக்கும் என எப்போதும் கூறியதில்லை. மாறாக, அவர் அது கடினத்துடன் செல்லவேண்டிய பாதை என்றே கூறுகிறார். அவர் தமது அப்போஸ்தலர்களுக்கு கொடுத்த வாக்குத்தத்தம் என்னவெனில், உலகம் அவர்களை பகைக்கும் என்பதே! (யோ 15:18-20). அவர் நமக்கு கொடுக்கும் உறுதி என்னவெனில், அவரைப் பின்பற்றுகிறவர்களாகிய நாம், எதிர்ப்பையே எப்போதும் எதிர்நோக்கி காத்திருக்க வேண்டும், ஏனெனில் இந்த உலகம் தேவனுடைய தீர்க்கதரிசிகளை அவ்வாறே செய்துவந்துள்ளது. மத் 16:24ல் இயேசு கூறினார், " ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்" என்றார். தன்னைத்தான் வெறுப்பது என்பதும், தன் சிலுவையை சுமப்பது என்பது சாதாரண விஷயம் அல்ல. ஆனாலும், இன்று அநேக சபைகள் வேதாகமத்திற்கு மாறாக, உங்களுக்கு பரலோகத்தை எளிமையான வழியிலே கொடுக்க முயலுகின்றனர்.

ஜாம்பியாவில் மிஷனரியாக இருக்கக் கூடிய என்னுடைய நண்பர் டேவிட் பிரஞ்ச், சில மாதங்களுக்கு முன் என்னிடம், ''சபை என்பது பயணக் கப்பலா? போர்க் கப்பலா?'' என கேட்டார். நிச்சயமாக அவை இரண்டிற்கும் பெரிய வித்தியாசம் உண்டு. ஒரு பயணக் கப்பல் தன்னுடைய பயணிகளுக்கு இன்பத்தைக் கொடுக்கும்படி வடிவமைக்கப்படும். அதில் அழகான சுற்றுப்புறமும், அளவுக்கு அதிகமான உணவும், பொழுதுபோக்கு வாய்ப்புகளும் இருக்கும். அதில் பயணிகள் ஏதும் கடினமான தியாகம்

> பயணக் கப்பல் என்னும் சொகுசான சபையில் இருந்து கொண்டு
> நம்முடைய ஆவிக்குரிய போரை நாம் ஜெயிக்க முடியாது.

செய்ய வேண்டியதில்லை. ஆனால், போர்க்கப்பல் வித்தியாசமானது. போர்க் கப்பலானது கடினமான இரும்பினால் ஆனது. அதில் பயணிக்கும் குழுவிற்கு இன்பமும், சந்தோஷமும் முக்கியமானதல்ல. கடின வேலையும், தியாகமும் அதில் உள்ளவர்களுக்கு அவசியம்! மேலும் அவர்களின் குறிக்கோளான எதிரியை அழிப்பதே அவர்களின் நோக்கம்.

அநேக சபைகள் இன்று, ஒரு சொகுசான பயணக்கப்பலைப் போல இருக்க விரும்புகின்றனர். எந்த ஒரு மனிதனும் விரும்பும் எல்லா வசதிகளும் நிரம்பிய அழகிய சபை கட்டிடங்களை அவர்கள் தருகின்றனர். அங்கு வரும் மக்களிடம் மிகவும் கொஞ்சமாகவே தியாகமும் அர்ப்பணிப்பும் எதிர்பார்க்கப்படுகின்றது. அங்கு நடைபெறும் ஆராதனைகளும் கூட உங்களைப் பற்றியும், உங்கள் வாழ்வை பற்றியும், தேவனுடனான உங்கள் உறவையும் திருப்தியுள்ளதாக நினைக்கச் செய்கிறது. அங்கு போதிக்கப்படும் பிரசங்கங்களும் கூட குற்றப்படுத்தாத விதமாகவும், பாவத்தைப் பற்றியோ, சுயத்தை வெறுப்பதைப் பற்றியோ குறிப்பிடாத வண்ணம் இருக்கும். எவர் ஒருவருடைய வாழ்வு முறையையோ, நம்பிக்கையையோ கடிந்து கொள்வதென்பதே அங்கு இராது. அன்பு என்பதை மட்டுமே எப்பொழுதும் அவர்கள் உணர்ந்து கொண்டிருப்பார்கள்.

இருளுக்குரியவர்களாகிய ஆவிக்குரிய எதிரிகளுடன் நமக்கு ஆவிக்குரிய போர் உண்டு. எந்த ஒரு நேசமும், தன்னுடைய கடற்படையில் பயணிகளின் கப்பலை வைத்துக் கொண்டு மற்றொரு நாட்டை ஜெயிக்க முடியாது! இதுவே ஆவிக்குரிய ரீதியிலும் உண்மை. பயணக் கப்பல் என்னும் சபையில் இருந்து கொண்டு நம்முடைய ஆவிக்குரிய போரை நாம் ஜெயிக்க முடியாது. தன்னுடைய வாழ்விலே மிகுந்த போரட்டத்தை சந்தித்தபின் பவுல், இளைஞனான தீமோத்தேயுவுக்கு உறுதியளிக்கையில் இவ்வாறு கூறினார், “நீயும் இயேசு கிறஸ்துவுக்கு நல்ல போர்ச் சேவகனாய்த் தீங்கநுபவி” என்று. நாம் வேதாகமத்தில் பார்க்கும் வரை, பரலோகத்திற்கான எளிய வழியென்று ஒன்றில்லை. நமக்காக கிறிஸ்து மிகவும் அதிகமாக பாடுபட்டபடியினாலே, நாமும் பாடுபட்டு, தியாகம் செய்ய மனதுள்ளவர்களாயிருக்க வேண்டும். இப்படிச் செய்வது சாதாரண காரியமில்லை; ஆனால் நம்முடைய முயற்சிக்கான பலன் நிச்சயம் உண்டு. இந்த உண்மையை ஆவியானவரின் அருளினால் பவுல் நமக்கு உறுதி செய்கிறார்.( 1 கொரி 2 : 9; ரோ 8:18 ) நீங்கள் இதை நம்புகிறீர்களா?

**– (தமிழில்) கிங்ஸ்லிராஜா**



## இம்மாதக் கேள்விகள்

1. ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் நம்மை எதினின்று விடுதலையாக்கிற்று?

2. கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே என்ன உண்டு?

3. இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கியவர் யார்?

4. " என்னை நோக்கி கூப்பிடு நான் உன்னை விடுவிப்பேன்" என வாசிப்பதெங்கே?

5. யார் விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவோம்?

6. "......................" இக்கட்டினின்று விடுவிக்கப்படுவான்?

7. நாம் எதினின்று விடுதலையாக்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளானோம்?

8. சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை "..................."

9. துன்மார்க்கத்தை எது விடுவிக்க மாட்டாது?

10. யாருடைய சந்ததி விடுவிக்கப்படும்?

(பதில்கள் செப்டம்பர் 1ம் தேதிக்குள் வரவேண்டும்)



## சிறுவர்க்கான கேள்விகள்

1. சீடர்கள் ஓய்வுநாளில் என்ன செய்தார்கள்?

2. ஆண்டவர் ஜெப ஆலயத்தில் என்ன செய்தார்?

3. அங்கே அவர் யாரை குணமாக்கினார்?

4. அன்று ஓய்வு நாள் என்பது எதனை குறிக்கும்?

5. பழைய ஏற்பாட்டின் ஓய்வு நாள் என்பது வாரத்தின் எந்த நாளை குறிக்கும்?



(பதில்கள் செப்டம்பர் 1ம் தேதிக்குள் வரவேண்டும்)

அனுப்ப வேண்டிய முகவரி :

**திருமதி. பேபி ராஜா**

45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு, அரசரடி

மதுரை - 625 016 செல்: 92 4421 4421

## சென்ற மாத பதில்கள்

| | |
|---|---|
| 1. எண் 12:3 | 6. பிரசங்கி 7:8 |
| 2. சங் 92:6 | 7. மத் 5:5 |
| 3. 2பேதுரு 3:4 | 8. 1தீமோ 6:10 |
| 4. நீதி 11:2 | 9. எபே 5:3 |
| 5. 1கொரி 13:7 | 10. 1தெச 4:5 |

## ஜீலை மாதம் சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

1. V. ஷைனி – மதுரை
2. V. ஷாலி – மதுரை
3. P. ஜெபக்கனி – மதுரை
4. P. சாம் – மதுரை

## தாமதமாக பதில் எழுதியவர்கள்

1. A.R. ஆனந்த் – கோவை
2. D. கண்ணன் – கோவை
3. A. சேகர் – கோவை
4. M. ஜான் – கோவை
5. J. ஜெரால்டு பிரின்ஸ் – மணப்பாறை
6. J. பியூலா – மணப்பாறை
7. Mrs. பிரேமலதா சுந்தர்பாபு – செங்கல்பட்டு

## ஜீலை மாதம் பதில் எழுதியவர்கள்

1. Mrs. தெல்மா ஸ்டான்லி – மதுரை
2. Mrs. ஹெலன் திலக் – மதுரை
3. Mrs. மேரி ராஜ் – மதுரை
4. Mrs. ஜெமிமா நல்லையா – மதுரை
5. Mrs. ஜெமிமா நல்லையா – மதுரை
6. Mrs. பெரில் பாஸ்கர் – படப்பை
7. Mr. லூயிஸ் பால்ராஜ் – கோவில்பட்டி
8. Mrs. லாரா ரத்னராஜ் – தூத்துக்குடி
9. A. சந்திரா – மதுரை
10. Mrs. புளோரா சுந்தர் – மதுரை
11. V. கண்ணம்மாள் – கோவை
12. Mrs. டெய்ஸி தர்மராஜ் – புதுக்கோட்டை
13. Mrs. காந்தா மனோகரன் – திருச்சி
14. Mrs. டெய்ஸி அழகுராஜ் – நெல்லை
15. Mrs. பிரேமலதா சுந்தர்பாபு – செங்கல்பட்டு
16. Mrs. அன்பு சுதந்திரம் – நெல்லை
17. Mrs. ஆனி விக்டோரியா – சென்னை
18. Mrs. லில்லி ஆல்பர்ட் – நெல்லை
19. Sis. லிசி ராஜசேகரி – மறைமலைநகர்
20. Mrs. ஸ்டெல்லா வால்டர் – கோவை
21. N. ஞானசுந்தரி நாகராஜன் – நெல்லை
22. Mrs. ரேச்சல் தமிழரசி – மதுரை
23. Mrs. உமா – மதுரை
24. Mrs. ஞானசிரோன்மனி – மதுரை
25. Mr. பொன்தினகரன் – மதுரை
26. J. சாராள் – மதுரை
27. Mrs. சந்தியா பொன்தினகரன் – மதுரை
28. Mr. ஈஸ்டர் சுதந்திரன் – மதுரை
29. Mrs. ஜீவகாந்தி – சேலம்
30. Mrs. சுகந்தி ஜோன்ஸ் – திருச்சி
31. G. புஸ்பா ஜேம்ஸ் – விருதுநகர்
32. Mrs. கேற்றி செல்லத்துரை – சென்னை
33. Mrs. கேத்ரின் அருள்நேசம் – மதுரை
34. G. பீட்டர் பால்ராஜ் – தூத்துக்குடி
35. Mrs. ஜெபசீலி ஜெயக்கொடி – திருச்சி
36. Mrs. மெர்ஸி ரூபஸ் – சேலம்
37. R. சரோஜா – தென்கலம்
38. Mrs. ஹில்டா ராபர்ட – திருச்சி
39. Mrs. லீனா சார்லி – சென்னை
40. S. சார்லி சந்திரன் – சென்னை
41. I. அலெக்சாண்டர் சாலமோன் – சிவகங்கை
42. Mrs. வசந்தி எலிசபேத் – மதுரை

**தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !**